BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



Bergen Tamilsk Avis - no.36,37 - April,May 2024 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.36,37 சித்திரை,வைகாசி - 2024

## உறவுகளுக்கு வணக்கம்

நோர்வே நாட்டில் கடந்த 20 ஆண்டுகளில் புலம்பெயர்ந்த பின்னணி கொண்ட மக்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக அரச அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பாவை சுற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெரும் யுத்தங்களினால், இங்கு தஞ்சம் கோரி வருவோரின் எண்ணிக்கைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அகதி அந்தஸ்து கோரி வரும் மக்களுக்கான அடிப்படை வசதிகளினை ஒழுங்கு செய்வதோடு, அவர்களுக்கான பாதுகாப்பான வாழ்நிலையையும் ஏற்படுத்தி கொடுப்பதற்கு பல மட்டங்களிலும் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு செயற்பட்டு வருகின்றனர்.

உக்ரைனில் இருந்து தஞ்சம் கோரி வந்த மக்கள் தங்கி இருக்கும் பேர்கனில் உள்ள அகதி முகாம் ஒன்றுக்கு தேன் தமிழ் இதழ் குழுவினராகிய நாம் சென்று பார்வையிட்டு, பணியாளர்களோடு கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினோம். பல பெற்றோரை இழந்த பிள்ளைகளையும், பிள்ளைகளை இழந்த பெற்றோரையும், இளையோர் பலரையும் அங்கு காணமுடிந்தது.

இவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்ய பல தொண்டர்கள் நிறையவே தேவைப்படுகின்றனர் எனவும், தொண்டு நிறுவனங்களின் உதவிகளையும் தாம் நாடி நிற்பதாகவும் தெரிவித்தனர். சிறுவர்களோடு சேர்ந்து விளையாட சிறுவர்களையும், இளைஞர்களுக்கு நண்பர்களும் அதிகம் தேவைப்படுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

நோர்வே போன்ற நாட்டில் எவ்வளவுதான் வாழ்தலுக்கான வசதிகள் இருந்தாலும், இங்கு அகதிகளாக வந்து தஞ்சம் கோரிய மக்கள் சந்திக்கின்ற சவால்கள் ஏராளம். அதேவேளை புலம்பெயர் வாழ் மக்களை இந்நாட்டின் கலாசாரத்துடன் இணைத்து, சமூகமான வாழ்வுக்குள் கொண்டு வருவதற்கு அரசு பீடங்கள், நிறுவனங்கள், நகரசபைகள், பணியாளர்கள் சந்திக்கும் சவால்களும் ஏராளம் எனலாம்.

இந்நாட்டின் மொழியை மற்றும் கலாசார வழக்கங்களை கற்றுக் கொள்ளவும், இந்நாட்டு மக்களோடு இணைந்து கைகோர்த்து நடக்கவும் புலம்பெயர் வாழ் மக்களை பயிற்றுவிக்க அரசு தரப்பின் உதவியுடன் பல நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இதனை இந்நாட்டில் வாழும் ஈழத்தமிழர்களாகிய நாமும் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

இன்று பல தொண்டு நிறுவனங்களும் நோர்வேயிய மொழியை, சமூகவியல் மற்றும் வரலாற்று பாடங்களை கற்பித்து வருகின்றனர். அத்துடன் உடற்பயிற்சி, விளையாட்டுகளையும், கலை அரங்க நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றனர். இவற்றிலே நாமும் இணைந்து கொண்டு நம்மை வளர்த்துக் கொள்ளலாம். அவசியமானோர் தொடர்பு கொள்ளுங்கள், தேன் தமிழிதழ் இதற்காக உதவி புரிய காத்திருக்கிறது.

நமக்கு தஞ்சம் தந்த நாட்டுடன் நாமும் இணைந்து கொள்வோம்.

நாட்டின் சிறப்புத் தன்மைகளை கற்றுக்கொள்ளுவோம்.

வாழும் சூழலை பாதுகாப்போம்.

தேன் தமிழிதழ்
*Ansvarlig redaktør: Julius Antoni*
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674

BTA BERGEN TAMILSK AVIS

# காலநிலை மற்றும் சுற்றுச்சூழல்



153 நாடுகளைச் சேர்ந்த 11,000 விஞ்ஞானிகள் உலகம் பருவகால நிலையின் மிகவும் மோசமான நெருக்கடியை நோக்கிச் செல்வதாக அறிக்கை வெளியிட்டுள்ளனர். இதற்கு விரைவாக ஏதாவது மாற்றுத் திட்டங்கள் செய்யாவிட்டால் பெரும் இக்கட்டான துன்பத்திற்கு வழிவகுக்கும் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2030க்குள் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை குறைந்தது 50 சதவீதம் குறைப்பது நோர்வேயின் இலக்கு ஆகும்.
ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அறிக்கையின்படி கடந்த 20 ஆண்டுகளில் கடலின் வெப்பமயமாதல் விகிதம் இரட்டிப்பாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் கடல்சார் நிபுணர்களின் புதிய அறிக்கையில் இது தெரியவந்துள்ளது.

புவி வெப்பமடைதல் மற்றும் மாசுபாடுதல் ஆகிய இரண்டாலும் கடல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது என்று அவர்கள் தங்கள் சமுத்திரத்தின் நிலை அறிக்கையில், State of the Ocean 2024இல் குறிப்பிட்டுள்ளனர்.

பாரிஸ் உடன்படிக்கையில், காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளைத் தவிர்ப்பதற்காக, உலக நாடுகள் 2 டிகிரி மற்றும் 1.5 டிகிரியில் வெப்பமயமாதலை நிறுத்த ஒப்புக்கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று ஆண்டுகளில், காடழிப்பைத் தடுக்க இந்தோனேசியாவுக்கு நோர்வே பில்லியன் பணத்தொகையை செலுத்தியுள்ளது. இது ஒரு நல்ல முதலீடு என்று காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைத் தீவைப் பொறுத்தவரை அரசும்சரி, குடிமக்களும்சரி சுற்றுப்புறச்சூழல் மாசடைவது பற்றிய எந்தவித பிரக்ஞையும் இல்லாமல் இருக்கிறார்கள். குறிப்பாக, எந்தளவுக்கு கடல்சார் சூழலை சீரழியக்க முடியுமோ, கடல் வளங்களுக்கு எவையெல்லாம் படுபாதகமோ அவற்றையெல்லாம் மிகத் தாராளமாகவே செய்து வருகிறார்கள். பொருளாதார அபிவிருத்தி என்ற பெயராலும் கடல்வளங்களை நிர்மூலமாக்கும் திட்டங்களே செயற்படுத்தப் பட்டு வருகின்றன.



"Svalestjert" சிவாலேஸ்திஜெர்த். ஆங்கிலத்தில் "Papilio machaon" என அழைக்கப் படுகிறது.
பட்டாம்பூச்சிகளில் சற்று பெரிய உருவத்தைக் கொண்டது. மஞ்சள் கறுப்பு வண்ணங்களோடு கீழ் இறக்கைகளின் ஓரங்களில் நீலம், செம்மஞ்சள் வண்ணங்கள் காணப்படும். நோர்வேஜிய ஒளிப்படக்கலைஞர்கள் கோடை காலங்களில் மிகுந்த ஆர்வத்தோடு இவற்றைத் தேடித்தேடிப் படம் பிடிக்க விரும்புவார்கள்.

நிழற்படமும் குறிப்பும்
-கீதா-

**தமயந்தி எழுதும்**
**“நேமி என்கிற தர்ஷி”**
**இரண்டாம் பாகம்**
**அடுத்த இதழிலிருந்து தொடங்குகிறது.**



# மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 20.04.2024



மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 20.04.2024 சனிக்கிழமையன்று பேர்கனில் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றன.

பேர்கனிலுள்ள ஏழு உதைபந்தாட்டக் கழகங்கள் விளையாட்டில் மிகவும் ஆர்வத்தோடு கலந்து கொண்டன.





சிறப்பாக நடைபெற்ற முதல் சுற்றுப்போட்டிகளின் முடிவில் Tiki Taka Rumba, Tiki Taka Zumba, Atletico Bergen Black, Atletico Bergen White ஆகிய அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவாகின.

அரையிறுதி ஆட்டத்தில் Tiki Taka Rumba அணியினரை எதிர்த்து Atletico Bergen White அணியினரும், Tiki Taka Zumba அணியினரை எதிர்த்து Atletico Bergen Black அணியினரும் விளையாடி, இறுதி ஆட்டத்திற்கு Tiki Taka Rumba அணியினரும் Atletico Bergen Black அணியினரும் தெரிவாகினர்.



மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி ஆட்டத்தின் முடிவில், Atletico Bergen Black அணியினர் 2-1 என்ற கோல்களால் வெற்றி பெற்றனர்.

இரண்டாவது இடத்தை Tiki Taka Rumba அணியினரும், மூன்றாவது இடத்தை Atletico Bergen White அணியினரும் பெற்றுக்கொண்டனர்.

சிறந்த விளையாட்டு வீரராக Atletico Bergen Black அணியைச் சேர்ந்த அருண் அமிர்தலிங்கம் அவர்கள் சிறப்புக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார்.

சிறந்த கோல் காப்பாளராக Atletico Bergen Black அணியைச் சேர்ந்த ஜெரமி செல்வராஜா அவர்களும் ஒழுக்கமான விளையாட்டு வீரராக Tiki Taka Rumba அணியைச் சேர்ந்த விதுரன் நரேஷ்குமார் அவர்களும் சிறப்புக் கிண்ணங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அதிக கோல்களைப் போட்ட வீரராக Tiki Taka Rumba அணியைச் சேர்ந்த சாரங்கன் சிவகணேசன் அவர்களும், Atletico Bergen Black அணியைச்சேர்ந்த ஜெரோன் ரொபேர்ட் அவர்களும், சிறப்புப் பரிசு Bergen Vest அணியைச்சேர்ந்த சுரேன் ஜெராட் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.




மகளுக்குத் தடுப்பூசி போடவேண்டியிருந்தது. சிறுவர்களுக்கான மருத்துவரிடம் அழைத்துக் கொண்டு போயிருந்தேன். எமக்கான அழைப்பு வரும்வரை காத்திருக்கும் அறையில் காத்திருந்தோம். அப்போது தான் அந்தச் சத்தம் கேட்டது. யாரோ வைத்தியருடன் வாதாடிக் கொண்டிருந்தார்கள். வைத்தியர் நிதானமாக, பொறுமையாக விளக்கிக் கொண்டிருந்தார். வைத்தியரின் குரல் மெதுவாகவும் அவரோடு உரையாடிக் கொண்டிருந்த குரல் பலமாகவும் கேட்டது.

காதைச் சற்றுக்கூர் தீட்டி அவதானிக்கத் தொடங்கினேன். சரியாகப் புரியாத போதும், தட்டுத் தடுமாறிய உச்சரிப்பும் இடையிடையே தமக்குள் பேசிக்கொண்ட தமிழ் வார்த்தைகளும், இன்னும் சற்றுத் தீவிரமாக அவதானிக்க வைத்தன.

அவரது சேவை தமக்குத் தேவையென கையெழுத்துப் போராட்டம் நிகழ்த்தி இங்குள்ள மக்கள் அந்த வைத்தியரது சேவையை நீடிக்க வைத்திருக்கிறார்கள். கூடவே எனக்குச் சில வீடுகள் தள்ளி அவர் வசிப்பதனால் தனிப்படவும் அவரை நான் அறிவேன். பொதுப்படக் குழந்தைகள் மீது அக்கறையும் கவனமும், பொறுப்புணர்வும் கொண்ட வைத்தியர் அவர். அவரோடு எதன் பொருட்டு மல்லுக்கட்டுகிறார்கள் என்று அறியும் நோக்குடன் எழுந்து வெளியே வந்தேன்.


இஞ்ச நான் சொல்லுறது இந்த மனுசனுக்கு விளங்குதில்லை, ஒருக்கால் சொல்லுங்கோ என்று அந்தத் தமிழ்ப் பெண் என்னிடம் சொன்ன அதே நேரத்தில் வைத்தியரும் இந்தத் தடுப்பூசியின் அவசியம் பற்றி இவர்களுக்கு ஒருமுறை தெளிவாக எடுத்துச் சொல்கிறாயா என்றார்.

அவர் குறிப்பிட்டது ஜேர்மனியில், பதின்நான்கு வயதிலிருந்து பதினெட்டு வயதிற்குள் சிறுவர் வைத்தியரால் போடப்படும் கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கெதிரான தடுப்பூசி.

அது பற்றி எனக்கு அவர் அதிகம் விளக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. போதியளவு விளக்கத்தை என் குழந்தைகளுக்காக அவர் முன்பே வழங்கியிருக்கிறார். கூடவே அது பற்றித் தேடி வாசித்து அறிந்தும், மருத்துவத்துறைசார் பல்கலைக் கழகக் கல்வியில் அது பற்றிய அவசியங்கள் விளக்கப்படுவதைக் கேட்டறிந்த அனுபவங்கள் உள்ளதாலும், அந்தப் பெண்ணுக்கு அதுபற்றி எடுத்துக்கூற முயன்றேன்.

புரியாதவர்களுக்குப் புரிய வைக்கலாம். புரியவே கூடாது என முடிவு செய்து விட்டவர்களுக்கு...? அவர் அப்படி முடிவோடு தான் இருந்திருப்பார் போல உணர்ந்தேன்.

அதிகரித்து வரும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயானது எதிர்காலச் சந்ததிக்குப் பரவாமல் காப்பதற்காகவே அந்தத் தடுப்பூசி போடப்படுவதாகவும், போடுவதால் பாதிப்பு எதுவும் நிகழ்ந்து விடாது என்று நம்பவைக்க நீண்ட நேரம் தேவைப்பட்டது. அதன்பின் அவர் கூறிய பதில் மிக அருவருப்பானதும் எரிச்சலூட்டக் கூடியதுமானது.



“அப்படி பாதுகாப்புக்குப் போடுறது எண்டாலும் எங்கட பிள்ளைகளுக்கு கல்யாணத்துக்குப் பிறகு போட்டால் போதும் தானே. உந்த வெள்ளையள் தான் பதினாலு வயதிலேயே ஆளுக்கொண்டைப் பிடிச்சுக் கொண்டு போறதும்......” இப்படியான பேச்சுக்களுக்குக் காது கொடுக்கவும் பதில் சொல்லவும் நான் ஒருபோதும் தயாரில்லை என்பதால், நான் கவனிக்காமல் இறுகிப்போய் அவ்விடத்தில் நின்றிருந்தேன்.

அவர் தமிழில் என்ன கூறினார் என்பதோ, அதில் நின்றிருக்கும் எனக்குள் இருக்கும் கொதிப்போ புரியாமல் அவர்களது பதினாறு வயது மகனுக்கும் அந்தத் தடுப்பூசி போடவேண்டும் எனச் சொல் என்றார் வைத்தியர்.

எனக்கு இப்போது வைத்தியரில் கோபம் வந்தது.

பதினைந்து வயதுப் பெண் குழந்தைக்குப் போடுங்கள் என்றால் கல்யாணத்தின் பின்தான் கருப்பை பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் வருகிறது. அதுதான் எங்கள் கலாச்சாரம் என்று சொல்பவர்களிடம் ஆண்குழந்தைக்குப் போடுங்கள் என்றால் ஆண்மகனுக்குக் கருப்பை எங்கே இருக்கிறது என்று கேட்க மாட்டார்களா என்று பயம் வந்தது.

எண்ணியது போல் மட்டுமல்ல அதற்கு மேலும் பேசினார். கிண்டலாகச் சிரித்தார் அந்தப் பெண். “ஆம்பிளைப் பிள்ளைக்கும் போடுறதெண்டால் அவனுக்கென்ன கருப்பை இருக்கே கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோய் வர. உவங்களுக்கு விசர். தாங்கள் ஆராட்சி செய்யிறதை எங்களில தான் சோதிச்சுப் பார்க்கிறாங்கள்” என்றார்.

“இஞ்ச பாருங்கோ, ஆம்பிளைகளுக்குக் கருப்பை இல்லை எண்டது டொக்ரருக்கும், எனக்கும், உங்களுக்கும் எல்லாருக்கும் தெரியும். ஆனால் இந்தக் கர்ப்பப்பைக் கழுத்துப் புற்றுநோய் நுண்ணுயிரி ஆண்கள் மூலமாகப் பெண்களுக்குப் பரவக் கூடியது. அதற்கு எதிரான சக்தியை ஒரு ஆண்குழந்தை தன் உடலில் கொண்டிருக்கும் போது அது அவனுடலில் தங்கிக் காத்திருக்கும் வாய்ப்பை இழக்கிறது. அவனோடு தொடர்பு கொள்ளும் பெண் அவன் மூலமான பரவலில் இருந்து தப்பிக் கொள்கிறாள்” என்றேன்.

அவருக்குப் புரிந்தாலும் ஏற்க மனமற்று இருந்தார். புரியவைக்க முயற்சிப்பது இன்னொருவர் கடமை என்றாலும், ஏற்பது அவரவர் உரிமை என்ற நோக்குடன் இந்தத் தடுப்பு மருந்தைப் பரவலாக பதின்ம வயதினருக்குக் கொடுக்கும்போது ஒரு காலகட்டத்தில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் என்பதை கூடியளவு ஒழித்து விடலாம் என எதிர்பார்க்கிறார்கள். அதனாலேயே அதுபற்றி அறிவுறுத்துகிறார்கள். மருந்தை ஏற்றிக் கொள்வதும் ஏற்றாமல் விடுவதும் உங்கள் விருப்பங்களைப் பொறுத்தது.

பதினெட்டு வயது வரை குறிப்பிட்ட தடுப்பூசியை சிறுவர் மருத்துவரிடம் பெற்றுக் கொள்வதற்கு மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் பணம் அறவிடுவதற்கான சட்டங்கள் இல்லை. பதினெட்டு வயதின் பின் பிள்ளைகள் அவரவர் அறிவின் நிமித்தம் குடும்ப வைத்தியரிடம் குறிப்பிட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதாயின் அதற்கான தொகையை அவர்களாகவே செலுத்த நேரும் என்று விளக்கிவிட்டு நான் என் இடத்தில் அமரப் போக, “இதுகள் இந்த வெள்ளையள் பலதோட போகுங்கள். அதுகளுக்குத் தான் இதெல்லாம் தேவை. நாங்கள் ஒண்டிலேயே வாழுற ஆக்கள். எங்கட பிள்ளையளுக்குத் தேவைப்படாது” என்றார் அந்த அம்மா தீர்மானமாக.

புன்னகைப்பதைத் தவிர என்னிடம் வேறு பதில் இருக்கவில்லை. இருட்டில் இருக்கிறேன் என்பவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வரலாம். இருட்டையே வெளிச்சம் என்று வீம்புக்குச் சொல்பவர்களை...?

## யார் இப்போது...? -காரையன் கதன்-

பகலிலும் இரவிலும் நகரும்
தனித்துவம் பெற்றிருந்த
இராணுவ உடல்
துப்பாக்கி
கோல்சர் இரண்டு சோடி உடைகள்
உணவுப் பொதிகள்
மேலதிக ரவைகள் என
எல்லாவற்றையும்
அவிழ்த்து போட்டு நகர்ந்தது.

சக வீரர்களின்
காயத்தின் வலியிலும் ஏறி மிதித்து
உயிர் காக்கும் ஆசை
சத்திய பிரமாணத்தை
சாகடித்த நொடியில்
உயர்த்தப்பட்ட கைகளுக்கு
கிடைத்த உணவுகளை
வயிற்றுப்பசி மட்டுமே
உண்ட கதையை ஏன் மறைக்க

உணர்வும் தொடர்ந்து
உணர்ச்சியும் தொடர்ந்து
வாழப் பழகிய
இந்த வாழ்வில் -யார்
இப்போது
எதிரியும் துரோகியும்.

# மாஜிதா எழுதிய

# பர்தா

## நாவல் விமர்சனம்

-வான்நிலா- France

எப்போதும் பேசப்படவேண்டிய முக்கியமான படைப்பே பாத்திமா மாஜிதாவின் “பர்தா” நாவல். இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை கண்டித்தும், இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட மக்களையும் நினைவுகூரும் வகையில் லண்டனில் ட்ர பால்கர் சதுக்கத்தில் அமைந்திருந்த செயின்ற் மார்ட்டின் -இன் -த பீல்ட் தேவாலயத்தில் South Asian Solidarity Group என்னும் மக்கள் அமைப்பினால் நடத்தப்பட்டது. அன்றைய தினம் சுரையாவும் பங்குகொள்கிறாள்.

சுரையா என்கின்ற பெண்ணின் உள்ளக்குமுறல்களை வெளிக்கொணரும் துணிச்சல் மிக்க படைப்பாகவே பர்தா அமைகிறது.
சுரையா இவள் தலைமுடியை விதவிதமாக வெட்டி அழகு பார்ப்பவளுக்கு தாவணி போடுவதென்பதே மிக பெரிய கடினமானதொன்றே.

அக்காலகட்டங்களில் ஈரானுக்கு போய்வந்த அவளது ஊர் மௌலவி அறிமுகப்படுத்திய பர்தாவை அணிவதென்பது அவளுக்கு சுமையாகத்தான் இருந்தது. அவளது உம்மா பீவி மற்றும் வாப்பா ஹயாத்து லெப்பை இருவரும் வற்புறுத்துகிறார்கள். அவளோ ஏற்கமறுகிறாள். இதனால் கடுமையான தண்டனைகளையும் பெறுகிறாள்.

எனது பாடசாலைக் காலத்தில் என்தோழி விருப்பின்றி பர்தாவை முன்பு அணிந்ததும் என் நினைவில் வந்து போகிறது.
பர்தா அல்குர்ஆனில் சொல்லப்படாத ஆடை என ஓர் தரப்பினரும், பர்தா அணிவது கட்டாய கடமையென இன்னோர் தரப்பினரும் கூறிவரும் நிலையில், விரும்பி அணியும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சுரையா பின் பல்கலைகழகத்துக்கும் தெரிவாகிறாள். அங்கும் பர்தா அணிய வேண்டுமென வற்புறுத்தல்கள் அதிகாரத் தொனியோடு. மறுத்துப் போராடுகிறாள். பர்தா ஆடைமீது தீவிர தாகத்தோடிருந்த இர்பான் என்கின்ற சக மாணவனே தனவார மன நிலையை மாற்றுமளவுக்கு இவளது விவாதங்கள் அமைந்திருந்தன.
என்னுடைய ஆடையைத் தீர்மானிக்க நீங்கள் யார்? என்கின்ற அவளது கேள்வி அவனுக்கு நியாயமாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவளது சுதந்திரத்துக்கு தடையாக இல்லாமல் அவள் வாழ்வில் துணையாக பயணித்தான்.

பின் இருவரினதும் லண்டன் பயணம், ராபியா என்கின்ற மகள்.
பர்தாவும், ஹபாயாவும் அணிவது கடமை என்பதை மத்ரஸாவுக்கு சென்று படித்துவந்த ராபியா கூறும்போது சுரையாவுக்கு பேரதிர்ச்சியாகத் தான் உணர்ந்தாள். பல வருடங்களின் பின் பெற்றோரை பார்ப்பதற்காகத் தாயகம் செல்கிறாள். பின் மீண்டும் லண்டன் திரும்பும் வேளை தன் பேத்தி ராபியாவுக்கு பர்தாவை அன்பளிப்பு செய்கிறாள் சுரையாவின் உம்மா பீவி.
ஆனந்தத்தோடு பர்தாவை வாங்கி அணிவதற்கு செல்கிறாள் ராபியா. தொடர்ச்சியாக மகளோடும் போராடவேண்டிய தேவையோடு சுரையா.

பர்தா ஆணாதிக்க சமூகத்தின் மீதும், மதத்தின் மீதான அதீத நம்பிக்கை, பெண்கள்மீது யாவையும் திணித்தல் இவைகளை எதிர்க்கும் முகமாக மௌனித்திருக்கின்ற பல பெண்களின் குரல்களாகவே பர்தா நாவல் வெளிவந்திருக்கிறது.
துணிச்சலோடு பெரும் சவாலைக் கையில் எடுத்து சிறந்த படைப்பொன்றை தந்த மாஜிதாவிக்கு வாழ்த்துக்கள்.

**-வான்நிலா-**

# குமுதினி -39




-நேதா மோகன்-

வைகாசி கோடையில்
எனது கடலின்
அலைகளின் மேல் முகடுகளில்
சிவந்த நுரைகளில் கடல் பொங்குகிறது.

நீர்பாடும் நீண்ட உப்புக்கடலின்
நீந்தும் குமுதினி
பெரும் அலைதிரள
செங்குருதிப் பிளம்பாய் கலக்க
தாய்க்கடல் தணலாய் எரிந்த காலம்.

ஆழியின் அடித்திசையெங்கும்
குருதிப்பெருக்கு,
கடல்வாழ் ஜீவன்கள் அனைத்தும்
இருண்ட கற்பார்களுள் ஒளிந்து போயின,

ஆகாயத்தில் மிதக்கும் பருந்தின் கண்களுக்கு
அத்தனையும் தெரிந்தது.
மனிதர் இறக்கும் பயத்தில்
அதன் சிறகுகள் இறுகி நின்றன.

அன்றழுத வடுக்கள் கண்களில் இருக்கிறது.
அன்றெரித்த உடல்கள்
கருகிய வாசம் நாசிகளில்
இன்றும் இருக்கிறது.

# டொக்டர் அரபாத்தின்
# இரண்டு குறிப்புகள்!



குறிப்பு-1

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரயீசி பயணித்த ஹெலிகாப்டர் அசர்பாய்ஜான் எல்லையில் விபத்தில் சிக்கியது. துருக்கி, ஆர்மீனியா, ஈராக், ஈரான், அசர்பாய்ஜான் ஆகிய நாடுகளை எல்லையில் கொண்ட காட்டுப் பகுதியில் விபத்து நேர்ந்துள்ளது. ஆரம்பத்தில் இதை Hard Landing என்று குறிப்பிட்டிருந்தனர். கடுமையான மூடுபனி ரயீசி தப்ரீஸை நோக்கி காரில் வந்ததாக ஒரு செய்தி வெளியானது

எனினும் தற்போது ரயீஸி மற்றும் வெளிநாட்டு அமைச்சர் "ஹசைன் அமீரப்துலாஹியன் ஆகியோர் விபத்து நடந்த போது ஹெலிகாப்டரில் இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. மிகவும் கடினமான Terrain Difficulty மற்றும் வனாந்தரத்திலே மோசமான வானிலை நிலவுகின்ற நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஈரானுடன் துருக்கிய மற்றும் ஈராக் தங்கள் எல்லைகளில் தேடுதல் நடவடிக்கைகளை முடிக்கி விட்டுள்ளார்கள்.

ஈரானிய ஹெலிகாப்டர்கள் மிகவும் பழைமையானவை அத்துடன் மிக சிரமத்திற்கு மத்தியில் அவற்றினை சேர்விஸ் செய்து பயன்படுத்தி வருகின்றனர். அசர்பாய்ஜான் நாட்டில் ஒரு அணைக்கட்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்துவிட்டு திரும்பும் வேளையில் மூன்று ஹெலிகாப்டர்களில் இரண்டு தப்ரீஸை அடைந்த போதும் இப்ராஹிம் ரயீசி பயணித்த ஹெலிகாப்டர் மாத்திரம் விபத்தில் சிக்கி இருக்கிறது. இந்த நிலையில் ஹெலிகாப்டரில் இருந்து கிடைத்த சிக்னல் மற்றும் பயணித்த ஒருவரின் மொபைல் போனில் கிடைத்த சிக்னலை வைத்து சரியாக விழுந்த இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் இதுவரை ஜனாதிபதி குறித்து எதுவிதமான தகவலும் இல்லை.

குறிப்பு-2

முள்ளிவாய்க்கால் போன்று ஒரே தேசத்தின் மக்களை அதே தேசத்தின் இராணுவம் கொன்று குவித்து இன சம்ஹாரம் செய்துவிட்டு அதைப் பெருமையாகக் கொண்டாடும் அவலம் வேறு எந்த நாட்டிற்கும் வரக்கூடாது.
சுதந்திர இலங்கையின் சுதேசிய தலைவர்கள் அனைவரும் சேர்ந்து நாட்டை அழிவுப்பாதையில் படிப்படியாக நகர்த்தி பேரழிவின் உச்சியில் கொண்டு வந்து விட்டதே இந்த நந்திக் கடலின் துயரம்.

டீ.எஸ் சேனாநாயக்க மலையக மக்களின் குடியுரிமை பறித்த போதே இலங்கை சிறுபான்மை மக்கள் விழித்திருக்க வேண்டும் அறவழியில் அதைத் தடுத்திருக்க வேண்டும். அவ்வாறான ஒரு பலம் அவர்களுக்கு இருந்து அதை சோல்பரி யாப்பும் Queens Councilஉம் வழங்கி இருந்தது. ஆனால் எமது தலைவர்கள் அது குறித்து சிந்திக்கவில்லை மலையகத்தில் புண்ணாக ஆரம்பித்து இறுதியில் வன்னியில் புற்றுநோயாக மாறி நிறைவுற்றது.

இனியொரு யுத்தம் இலங்கையில் வேண்டாம். இலங்கையர் என்ற அடையாளத்தை இனப் பாகுபாடு அற்ற ஏற்றத்தாழ்வு அற்ற அனைத்து துறைகளிலும் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் Meritocracy யாக இலங்கை மாற திறமை இருந்தால் தமிழர்கள் முஸ்லிம்கள் இலங்கையில் ஜனாதிபதியாக இராணுவ தளபதியாக பொலிஸ் மா அதிபராக வரக்கூடிய இலங்கையை உருவாக்குவதே நம் அனைவருக்கும் முன் உள்ள பொறுப்பு.
இதன் முதலாவது படி பொறுப்புக்கூறல் வெளிப்படைத்தன்மையான, அரசியல் நீதி பொது நிர்வாகம். நாட்டில் உள்ள அரசியல் கைதிகள் அனைவருக்கும் விடுதலை கொடுத்து அந்த வெற்றிடத்தை இலங்கையில் மோசமான பொருளாதார குற்றங்கள் இழைத்த அரசியல் வாதிகளை கொண்டு நிரப்ப வேண்டும் இதுவே நிரந்தர சட்டத்தின் ஆட்சிக்கான மக்களின் நம்பிக்கைக்கான அத்திவாரம். வெறுப்பு பேச்சு செயல் குற்றங்களுக்கு எதிரான கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டு அமுல் படுத்துவது காலத்தின் கட்டாயம். நீடித்த நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு இலங்கையில் அனைத்து துறைகளுக்கும் தேசிய கொள்கைகளை உருவாக்கி ஊழலுக்கு எதிரான பலமான நிர்வாக சட்ட கட்டமைப்பை ஏற்படுத்தி மக்களை நிம்மதியாக வாழவிட இலங்கை இதற்கு பின்னராவது திடசங்கற்பம் பூண வேண்டும்.

# இசையா? கவியா? குரலா? மொழியா?



~சிவா~

மாணவரின் கல்வி உயர்ச்சியிற்கு மாணவர் காரணமா..? ஆசிரியர் காரணமா..? பெறறோர் காரணமா...? என்றால் இதற்கான பதிலை வாசகரான உங்களிடம் விட்டு விடுகின்றேன்.
பூக்களின் அழகிற்கு அதன் நிறம் காரணமா? வாசம் காரணமா? அதனை எடுத்து வரும் தென்றல் காரணமா? என்றால் இதனையும் உங்கள் பதிலுக்கு விட்டுவிடுகின்றேன்.
காதலுக்கு ஆண் காரணமா? பெண் காரணமா? அல்லது அவர்கள் இடையோன அன்பு ஈர்ப்பு பண்பு காரணமா? என்றால் இதனையும் உங்களிடம் விட்டு விடுகின்றேன்.

ஒரு பாடலின் இனிமைக்கும், வெற்றிக்கும் இதமான கேட்டலுக்கும் இசையா, வரிகளா, அதனை பாடியவர்களா என்றால் நான் வரிகளுக்கு முன்பாக குரலைத்தான், பாடியவரைத்தான் சொல்வேன்.
ஆனாலும் இங்கும் மேலே பலவற்றில் கூறியவை போல் ஒரு கூட்டு உழைப்புத்தான் காரணம். இந்த கூட்டு உழைப்பைத் தனி ஒருவர் உரிமை கொண்டாடுவது சரியானது அல்ல. ஏற்புடையதும் அல்ல.

இது, பணத்தை முதலீடு செய்த தயாரிப்பாளர்களுக்கு சொந்தம் என்பதாகவும் நான் பேச முடியாது. வேண்டுமானால், இசைப்பிரியர்களான இரசிகனுக்கு சொந்தம் என்று கூறலாம்.

கவி வரிகளும் அது சார்ந்த மொழியும் இங்கு முதலில் உயர்ந்து நின்றாலும் இதனை கருத்தியல் ரீதியில் அழகாக வெளிப்படுத்தும் குரல்தான் இதற்கான அதிக வலுவை சேர்க்கின்றது. அதனுடன் இசையும் சேர்ந்தால் அது எம்மை தாலாட்டுகின்றது.
தாலாட்டை மீறிய சிறந்த இசையும் உண்டோ....? இதற்குள் இசையை விட குரலே அது சார்ந்த இயல்பான மெட்டே உயர்ந்து நிற்கின்றது.

கருவறையில் இருந்து பிறந்த உடன் தாயின் மடியில் அது எந்த உயிரினங்களாக இருந்தாலும் தனது குழந்தையை குரல் கொடுத்து அணைக்கும் அந்த மொழிதான் தாலாட்டு.

இத்துடன் இணைத்திருக்கும் பாடல்..... “காற்றுக்கு பூக்கள் சொந்தம்” பாடல் பற்றி நான் கூறுவதை நிறுவி நிற்கின்றது இங்கு காதலை இவ்வளவு அழகாக இனிமையாக அர்த்தம் உள்ளதாக யாவரும் ரசிக்கக்கூடியதாக வெளிக் கொணர்ந்த அந்த குரல் வரிகள் இசை என்றாக ஹரிகரன், சுஜாதா என்றாக பா.விஜய் இன் கவி வரிகளுக்கு நாம் எம்மை இழந்து போய்விடுகின்றோம்.
இசை அது S.A. இராஜ்குமார் என்று எண்ணி இருக்க அது சிற்பி என்பதாக எம்மைத் தாலாட்டி எம்மை எல்லாம் எங்கேயோ கொண்டு செல்கின்றது
“காற்றுக்கு பூக்கள் சொந்தம் பூவுக்கு வாசம் சொந்தம் வாசத்துக்கு சொந்தக்காரி வருவாளா.”
என்றாக அவளும் அவனும் இசையும் வரிகளும் குரலும் மெட்டும் என்றாக எம்மைக் கரைத்து விடுகின்றது.

நவரச நாயகன் கார்த்திக் நடித்த கண்ணன் வருவான் திரைப்படத்தில் சிற்பியின் இசையிலும், பா.விஜையின் கவிவரிகளிலும் எம்மைத் தாலாட்டி எங்கேயோ கொண்டு செல்கின்றது.
“காற்றுக்கு பூக்கள் சொந்தம் பூவுக்கு வாசம் சொந்தம் வாசத்துக்கு சொந்தக்காரி வருவாளா”
என்றாக அவளும் அவனும் இசையும் வரிகளும் குரலும் மெட்டும் என்றாக எம்மைக் கரைத்து விடுகின்றது.
இன்னும் ஒரு தடவை இளமைக் காலத்திற்கு திரும்பி புதிதாக காதலித்தால் என்ன என்று எண்ண வைக்கும் பாடல் இது.
மீண்டும் ஒரு முறை இந்தப் பாடலைக் கேட்டுத்தான் பாருங்களேன் இசை இரசிகர்களே. □



# இலங்கை 75: தேசியக்கொடியின் கட்டுக்கதைகள் - 5

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் தேசியக் கொடி குறித்த பல்வேறு கதைகளை நாம் இத்தொடரின் முந்தைய கட்டுரைகளில் பார்த்தோம். அதன் தொடர்ச்சியான இக்கட்டுரையில் வாளேந்திய சிங்கம் எவ்வாறு இலங்கையின் தேசியக் கொடியில் இடம்பெற்ற வரலாற்றை நோக்கலாம். சிங்களவர்கள் சிங்கத்தின் வழித்தோன்றல் என்ற கட்டுக்கதை சிங்கத்தை ஒரு அடையாளச் சின்னமாக உருவாக்கியது. ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டிய சில விடயங்கள் உண்டு.

முதலாவது, நவீன தேச அரசின் பிரதான அம்சங்களில் ஒன்று தேசியக் கொடியாகும். தேசிய ஒற்றுமையின் சின்னமாகவும் அதற்கான மக்களின் ஏற்பாகவும் தேசியக் கொடியும் தேசிய கீதமும் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த ஒற்றுமையின் சின்னங்கள் இல்லாமல் நவீன தேச அரசுகளைப் புரிந்து கொள்ள முடியாது.

இரண்டாவது, எல்லா வகையான கொடிகளும் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் அவை எதுவுமே தேசியக் கொடியாக இல்லை, அதாவது தேசத்தின் ஒற்றுமையைக் குறிக்கும் ஒன்றாக இல்லை. தேசம் என்ற கருத்துருவாக்கத்தோடே தேசியக் கொடி என்ற கருத்தாக்கம் தோன்றியது. இது ஒரு சமீபத்திய வரலாற்று நிகழ்வு.

மூன்றாவது, மிகவும் பழமையான இராச்சியங்களாக இருந்தபோதும் அவற்றிடம் தேசியக் கொடி என்றவொன்று இருக்கவில்லை. இதற்கு இரண்டு உதாரணங்களைக் காணலாம். பிரித்தானியா என்ற தேச அரசை வெளிப்படுத்திய யூனியன் ஜாக் 1803இல் அயர்லாந்து இணைக்கப்பட்டபோது தோன்றியது. இன்று பயன்பாட்டில் உள்ள டச்சுக் கொடியானது அது ஒரு தேசிய அரசாக மாறிய பிறகு, முந்தைய மாதிரிகளின் அடிப்படையில் முறையாக டச்சு மாநில குடியரசின் தேசியக் கொடியாக 1937இலேயே அங்கீகரிக்கப்பட்டது.



டச்சு கவர்னர் அன்பளிப்பு செய்த கொடி

நான்காவது, தேசியக் கொடிகள் என்பதும் அரசதரச் சின்னம் (Royal Standard) என்பதும் வேறுவேறானவை. தேசியக் கொடிகளை நாம் அரச தரம் என்று அழைப்பதில் இருந்து வேறுபடுத்த வேண்டும். முன்னாளில் அரசர்கள் தமக்கான அரச தரச் சின்னத்தை வைத்திருந்தார்கள். அது அவர்களது கொடியாகவும் இருந்தது.

அரச தரச் சின்னம் என்பதை இலகுவாக விளங்கிக்கொள்ள ஒரு உதாரணத்தை இங்கு பார்க்கலாம். 1815ம் ஆண்டு இலங்கை பிரித்தானியர் வசம் முழுமையாக வீழ்ந்தபோது யூனியன் ஜக் ஏற்றப்பட்டது என்பதே இன்றுவரை சொல்லப்பட்டு வரும் கதையாகும். ஆனால் அத்தருணத்தில் ஏற்றப்பட்டது பிரித்தானியாவின் யூனியன் ஜக் கொடியல்ல. அப்போதைய பிரித்தானிய அரசராக இருந்த மூன்றாவது ஜோர்ச் மன்னரின் அரச தரச் சின்னம் பொறித்த கொடியே ஏற்றப்பட்டது. இது குறித்த குறிப்பை கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியை சாத்தியமாக்கிய ஜோன் டி ஒயிலின் டயறிக் குறிப்புகளில் காணலாம். Diary of Mr. John D'Oyly என்ற நூல் 1917ம் ஆண்டில் அச்சில் வெளியானது. 1810 செப்டெம்பரில் தொடங்குகின்ற இக்குறிப்புகள் செப்டெம்பர் 1815 உடன் நிறைவடைகின்றன. இக்காலப்பகுதிக்குள் நடைபெற்ற விடயங்களை விரிவாக ஒயிலி தனது குறிப்புகளில் எழுதியுள்ளார்.

இதில் 1815ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி “கண்டிய பிரதானிகளுக்கும் ஏனையோருக்கும் கண்டிய ஒப்பந்தம் வாசித்துக் காட்டப்பட்ட பின்னர் பிரித்தானிய அரச தரச் சின்னத்தைக் கொண்ட கொடி ஏற்றப்பட்டது. அரச மரியாதைக்கு வேட்டுகள் தீர்க்கப்பட்டன. நல்ல வெப்பமான தெளிவான வானத்தைக் கொண்டதொரு நாள்” என்று ஒயிலி எழுதுகிறார். (பார்க்க: மேற்சொன்ன நூலின் 244வது பக்கம்)

இலங்கையின் சின்னங்களின் வரலாற்றில் வாளேந்திய சிங்கம் முதன்முதலில் டச்சுக்காரரின் காலத்திலேயே தோற்றம் பெறுகிறது. இலங்கை டச்சுக் கொலனியாக இருந்த காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட அரச இலச்சினையானது வாளேந்திய சிங்கத்தைக் கொண்டுள்ளது. இந்த இலச்சனையில் இருக்கின்ற வாளேந்திய சிங்கத்தை ஒத்ததே இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள வாளேந்திய சிங்கமாகும். இதைப் பின்பற்றியே இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள வாளேந்திய சிங்கம் வடிவமைக்கப்பட்டது என்பது பேராசிரியர் கணநாத் ஒபயசேகரவின் கருத்தாகும்.

இக்கருத்துக்கு அவர் இன்னொரு கொடியை உதாரணம் காட்டுகிறார். டச்சு கவர்னர் சலாகம சாதியைச் சேர்ந்த மகா கப்பின முதலியார் என்ற கரையோரச் சிங்கள அதிகாரிக்கு ஒரு டச்சுக் கொடியை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். அக்கொடியில் வாளேந்திய சிங்கம் இடம்பெற்றுள்ளது. எனவே வாளேந்திய சிங்கம் என்பது டச்சுக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு சின்னமே. காலப்போக்கில் பல்வேறு வரலாற்றுத் திரிப்புக்களின் வழி இது இலங்கையிரின் சுயாதீனமான சின்னமாக நிறுவப்பட்டுள்ளது.


இவ்விடத்தில் இன்னும் ஒரு விடயத்தையும் சொல்லியாக வேண்டும். 1815ம் ஆண்டு இறக்கப்பட்ட கொடி என்று கட்டமைக்கப்பட்ட கொடியின் நான்கு எல்லைகளிலும் இருப்பது தாமரை மொட்டுக்களேயன்றி அரசமிலை அல்ல. ஆனால் அது அரசமிலை எனப் பொருள் கொள்ளப்பட்டது. புத்தரோடு நெருங்கிய தொடர்புடையதாக அரச மரமும் இலையும் அடையாளப்படுத்தப்படுவதால் தாமரைமொட்டும் அரசமிலையாக மாற்றம் கண்டது. □




தாமரைக் கொடி



தேசியக்கொடி - 1948 முதல் 1951 வரை



தேசியக் கொடி - 1951 முதல் 1972 வரை



1972 முதல் பயன்பாட்டில் உள்ள தேசியக் கொடி

கரையோர மேற்பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரி (உடபலாத திசாவ) பயன்படுத்திய கொடி தாமரைக் (நெலும்மல்) கொடியாகும். இதன் நடுவே தாமரையும் அதன் நான்கு கரைகளிலும் தாமரை மொட்டுக்களுமே இருந்தன. இந்தக் கொடியின் வழித்தோன்றலாகவே நான்கு கரைகளிலும் தாமரை மொட்டோடு கொடிகள் உருவாகின என்று பேராசிரியர் கணநாத் ஒபயசேகர குறிப்பிடுகிறார். 1948 முதல் 51 வரை பயன்படுத்தப்பட்ட இலங்கைக் கொடியும் 1951 முதல் 71 வரை பயன்படுத்தப்பட்ட கொடியும் நான்கு மூலைகளிலும் தாமரை மொட்டுக்களையே கொண்டிருந்தன. 1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேசியக் கொடி தாமரை மொட்டுக்களை அரசமிலைகளாக மாற்றியது.

இப்போது பயன்பாட்டில் உள்ள கொடியின் நான்கு அரசமிலைகள் பௌத்தத்தின் நான்கு நற்பண்புகளான கருணை (மெத்தா), இரக்கம் (கருணா), சமத்துவம் (உபேக்ஷா) மற்றும் மகிழ்ச்சி (முதிதா) ஆகியவற்றைக் குறிக்கிறது. இது தொடர்பில் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறார்: "புத்தரின் தத்துவங்களை இந்த அரசமிலைகள் பிரதிநிதித்துவப் படுத்துவதாக இருந்தால், அவை புத்தர் போதித்த அகிம்சை, பொறுமை, மன்னிப்பு, அன்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. அப்படிப்பட்ட ஒரு கொடியில் எவ்வாறு வன்முறையையும் வீரத்தையும் பறைசாற்றும் வாளேந்திய சிங்கம் இருக்க முடியும்?"

இலங்கையின் தேசியக் கொடி இன்று சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் அடையாளமாக உள்ளது. ஆனால் அக்கொடியைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள அடையாளங்கள் அனைத்தும் கற்பனையானவை அல்லது கொலனியாதிக்கவாதிகளிடம் இருந்து கடன் வாங்கப்பட்டவை. இந்தத் தொடரில் பேசப்பட்ட இலங்கையின் தேசியக் கொடி சார்ந்த கட்டுக்கதைகள் சில செய்திகளை உறுதியாகச் சொல்கின்றன.

முதலாவது, இன்று எமக்குச் சொல்லப்பட்டுள்ள வரலாறு என்பது முழுமையானதல்ல, உண்மையானதுமல்ல. வரலாறு காலத்தின் தேவைக்கேற்ப கட்டமைக்கப்படுகிறது. அதில் தேசியவாதத்தின் பங்கு பெரியது. "எல்லா தேசியவாதங்களிலும் வரலாறு ஒரு மையமான பாத்திரம் வகித்துள்ளது. ஒரு விதத்தில், கடந்த காலம் காட்டப்பட்ட விதத்திலிருந்துதான் தேசியவாதம் தனக்கான அடையாளத்தைப் பெறுகிறது" என்ற ரொமிலா தாப்பரின் வரிகள் இங்கு நினைவுகூரத் தக்கவை.

இரண்டாவது, தேசியவாதம் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்காகக் கட்டுக்கதைகளை வரலாறாக உருவாக்க எப்போதும் தயங்கியதில்லை. இது அனைத்துத் தேசியவாதங்களுக்கும் பொருந்தும். இதற்குத் தமிழ்த் தேசியவாதமும் விலக்கல்ல. இதன் ஆபத்து யாதெனில் இங்கே தேசியக்கொடியின் பொய்கள் கட்டவிழும்போது எவ்வாறு ஆடையற்ற அரசன் போல் அரணின்றி அம்மணமாய் நிற்க நேர்கிறதோ அவ்வாறே நிற்க நேரும். எனவே தேசியவாதத்தின் பெயரால் உணர்ச்சிகர அரசியல்நோக்கில் கட்டுக்கதைகளை நம்பாமல் இருப்பது நல்லது.



பிரித்தானிய அரசர் மூன்றாம் ஜோர்ஜின் அரச தரச் சின்னம்

மூன்றாவது, வரலாறு என்பது எவ்வாறுதான் கட்டுக் கதைகளால் ஆனாலும் உண்மைகளைத் தேடியறிவது முக்கியமானது. தேடியறியாதவிடத்து எமக்குச் சொல்லப் படுவன, சொல்லப்பட்டன அனைத்தும் உண்மையே. எனவே அறிவியல் நோக்கில் உணர்வுகளை ஒதுக்கிவிட்டு நியாயமாக நடந்து கொள்வதும் உண்மைகளைக் கண்டடைவதும், கண்டடைந்த உண்மைகளை ஏற்கப் பழகுவதும் பயனுள்ளது.

நிறைவாக, இலங்கையின் வரலாற்றில் எத்தனையோ, பராக்கிரமபாகுக்கள், விஜயபாகுக்கள், விக்கிரமபாகுக்கள், வீரபாகுக்கள், ஜெயபாகுக்கள், கஜபாகுக்கள், புவனேகபாகுக்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் எந்தவொரு சிங்கள மன்னனும் தங்களது முன்னோரும், முன்னோடியுமான சிங்கபாகுவின் பெயரைப் பெற்றுக் கொண்டதில்லை. சிங்கபாகுவின் வரலாறு அப்படிப்பட்டது என்பதோடு அது ஒரு கட்டுக்கதை என்பதை அனைவரும் அறிவர். கட்டுக்கதைகளில் இருந்து வரலாற்றை உருவாக்க முற்படும் போது இவ்வாறான நெருக்கடிகள் தவிர்க்கவியலாதவை.



நெதர்லாந்தின் அரச இலட்சனை (coat of arms)

இலங்கையின் தேசியக் கொடியின் வரலாறு எவ்வளவு சுவையானது, அதேயளவு சுவையான கதைகள் இலங்கையின் ஏனைய கொடிகள் பற்றியும் இருக்கின்றன. குறிப்பாக இலங்கையில் ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது முதல் பதவிக்கு வந்த ஒவ்வொரு ஜனாதிபதியும் தனக்கெனத் தனியான கொடிகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

அவை ஒவ்வொன்றும் சுவையானவை.
அதேபோல் இலங்கையின் மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கொடி உண்டு. அவையும் ஏராளமான கதைகளை தம்முள் உட்பொதிந்து வைத்துள்ளன.
அவற்றை இன்னொரு சந்தர்ப்பத்தில் நோக்கலாம்.

# சூரியஒளி மின்சாரம்

சூரியன் இலங்கையைச் சுட்டெரிக்கிறது என்று திட்டுகிறோம், இயற்கை வழங்கும் வளங்களை ஆக்கசக்திக்குப் பயன்படுத்த முடியும் என்ற மனித அறிவை ஏன் மறந்து போனோம்.



இலங்கையில் அபரிதமாக கிடைக்கும் சூரிய ஒளி மூலம் நாலு கிலோமீட்டர் நீளம் நாலு கிலோமீட்டர் அகலமும் பாதினாறு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 2000 மிகாவெட் மின்சாரம் தயாரிக்க முடியும் இதை பட்டறிகளில் சேமித்து இரவில் வழங்க முடியுமானால் அத்துடன் இரவில் ஏற்படும் பீக் டிமாண்ட்டை சப்ளிமெண்ட் செய்ய பிற்பகல் 6-10 மணி வரை மட்டுமே நீர் மின் நிலையங்களை இயக்கி Demand - Supply மெட்ச்சிங் செய்ய முடியும். இவ்வாறு செய்தால் இலங்கையின் சனத்தொகையில் கால்வாசி பேருக்கு தங்கு தடையின்றி மின்சாரம் வழங்க முடியும்.

இதுபோன்ற நான்கு திசைகளிலும் நான்கு மிகவும் பாரிய நீர்நிலைகளில் உதாரணமாக இரணைமடு, மஹாகனதராவ, இங்கினியாகல, உடவளவை, லுணுகம்வெஹர மற்றும் புத்தளம் கடல் நீரேரி ஆகிய இடங்களில் 4*4 என்ற அளவில் தற்போதைய efficient specification solar panels கொண்டு ஐந்து Floating Solar Power plantsகளை அமைப்பதன் மூலம் மேலும் மன்னார், யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை Offshore Wind Power potentialஐ சூழல் பாதிப்பு இன்றி உற்பத்தி செய்யப்படும் உபரி மின்சாரத்தை கொண்டு புத்தளம், பரந்தன், ஹம்பாந்தோட்டை உப்பளங்களில் இருந்து கிடைக்கும் உப்பை மின்பகுத்து ஹைட்ரஜன் வாயு மற்றும் இரசாயன உற்பத்திகள் பல நூறு வகைகளை தயாரித்து அதை உத்தேச Fossil Fuel Facilities மற்றும் Supply Chain இல் முழுமையாக பிரதியிட்டு இலங்கையில் ஓடும் அனைத்து வாகனங்களும் இரயில்களும் ஹைட்ரஜன் கன்வேர்ஷனுக்கு மாற்ற முடியுமானால் இலங்கையின் பொருளாதார தலைவிதியை மாற்றி எழுத முடியும். இலங்கையில் முற்று முழுதாக சுவட்டு எரிபொருளில் இருந்து ஹைட்ரஜனுக்கு மாறுவதை தேசிய கொள்கையாக எடுத்து செல்லும் அதாவது எரிபொருள் தேவைக்கு இறக்குமதியில் தங்கியிருக்காது முழுவதும் உள்நாட்டு உற்பத்தியை செய்து தன்னிறைவு மற்றும் ஏற்றுமதி செய்யும் நீண்ட கால விஷன் கொண்ட தலைவர்களாலேயே இலங்கையின் தலை எழுத்தை மாற்றி எழுத முடியும். □ -யசீர் அரபாத்

## நோர்வே அரசாங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பு மாநாடு 2024

Regjeringens nasjonale integreringskonferanse 2024 கடந்த மே 22ம் நாளன்று ஒஸ்லோவில் உள்ள அரச வளாகத்தில் (parkveien 45-Oslo) நோர்வே அரசின் தேசிய ஒருங்கிணைப்பு மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டுக்கு தேன் தமிழிதழ் பொறுப்பாசிரியருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய தேன்தமிழிதழ் கலந்து கொண்டது. ஒருங்கிணைப்பு மாநாடு தொடர்பான விபரணங்கள் அடுத்துவரும் இதழில்...










**ஆராரோ.... ஆரிராரோ**
**ஆரிராரோ.... ஆரிராரோ....**
**நந்திக்கடல் ஓசைக்குள்ளே**
**நச்சுப்புகை கூரைக்குள்ளே**
**கந்தகத்து வாடைக்குள்ளே**
**மண்ணில் வந்தாய் என் மகனே**



**Thamayanthi**

இறுதி யுத்தநாட்களின் நினைவேந்தலாக இவ்வாண்டு பிரகாஷ் ராஜா அவர்களின் காத்திரமும் கனதியுமான நெறியாள்கையில், கவிஞர் பாலா சின்னப்பு அவர்களின் எழுத்துருவில் வெளியாகியிருக்கும் ஒரு பாடல்.

ஒரு இளம் தாயின் தாலாட்டாய்த் தொடங்கும் உருக்கமான பாடல். பாடற்களம் இறுதி யுத்தம் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால், நந்திக்கடல்.

காட்சிப்புலம் யுத்தகளத்தில் மக்களின் தற்காலிக குடியிருப்புக்களாய் அமைந்த தறப்பாள் குடிசைகள். யுத்தகளத்துக்குச் செல்லும் தனது துணைவனை கைக்குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு விடை கொடுத்தனுப்பும் இளம் துணையாள்.

இந்தப் பாத்திரங்களாய் வாழ்ந்திருப்பவர்கள் கவிஷா, அனுசன். அருள் செல்வம் அவர்களின் ஒளிப்பதிவு எம்மை அந்தக் களத்துக்கே நேரடியாக அழைத்துச் செல்கிறது. அவ்வளவு காட்சித்துல்லியம்.

நோர்வேயில் வாழும் எங்கள் தேசத்தின் சிறந்த இசையப்பாளர்களில் ஒருவரான விக்கி மகேசனின் இசையில் வெளியாகியிருக்கும் “மௌனித்த காற்றே” என்ற பாடல் இது. விக்கியின் இசையில் மீண்டுமொருதடவை நம் எல்லாரது நெஞ்சங்களையும் உருக்கி அழவைத்து, ஒரு இனத்தின் வரலாற்று ஆவணாமாகியிருக்கிறது.

வீரங்களையும் வெற்றிகளையும் மட்டுமே சாதனைகளாக, அடுத்த தலைமுறைகளுக்கான நினைவுகளாக வரலாற்றில் பொறித்துவைத்துவிட்டுப் போவதை விட, எமது புதல்வர்களின் தியாகங்களையும், எதிரி தந்த காயங்களையும், கந்தகத்தீயினால் கருக்கிச் சாம்பராக்கப்பட எமது உறவுகளின் முகங்களையும், அதன் வலிகளையும், உலகப்பெரும் சாம்ராஜ்யங்கள் செய்த சதிகளையும், இவை எல்லாவற்றுக்கும் அப்பால்.... தாய்மண்ணின் எஞ்சியிருக்கும் தவனத்தையும், அந்த மண்ணுக்கே உரித்துடைய தாய்மாரின் மனவோசை எழுப்பும் பரணிகளையும் நாம் பதிவு செய்தாக வேண்டும்.

2009 முதுவேனில்.
வன்னிக் குறு நிலப்பரப்பின் வான்முகட்டை கந்தகக் கரும்புகை சூழ்ந்திருந்த நாட்கள். நெருப்பின் நாக்குகள் மனிதத்தைச் சுட்டெரித்துச் சாம்பராக்கிக் கொண்டிருந்த கணங்கள். உலக மீட்பர்களாக தம்மை உச்சபட்சப் பெருமை பேசிக் கொண்டிருந்த உலகப் பெரும் வல்லரசுகளெல்லாம், ஒரு குறுநிலப்பரப்பில் ஒரு இனம் அழிக்கப் படுவது தெரிந்தும் கண்களை இறுக மூடிக்கொண்டு மௌனமாக இருந்த காலங்கள்.....



புலம்பெயர்நாடுகளில் வாழ்ந்திருந்த உறவுகளெல்லாம் குய்யோ முறையோவென தணிக்கை செய்யப்பட்ட துண்டுக் காட்சிகளை மட்டுமே பார்த்துக்கொண்டு கையறு நிலையில் இரத்தக் கண்ணீர் வடித்த காலங்கள்.
எதைத்தான் மறப்போம் நாம்... எதைத்தான் எங்கள் சதைகளில் இருப்பாணிகள் கொண்டு எழுதிப் பவுத்திரப் படுத்துவோம்...

போகிறபோக்கில் ஏதாவதொரு பாடலை இசைத்து பதிவு செய்துவிட்டும், அர்த்தமற்ற வரிகளுக்கு வண்ணக்கலவையில் படமெடுத்து வியாபாரக்கவர்ச்சிப் பாசாங்கு பண்ணாமலும், கலைஞர்களுக்குரிய சமூகக்கடமை, வரலாற்றுக் கடமை என்பவற்றை ஆழ முன்நிறுத்தி, ஆழப் பதிவு செய்யப்பட்ட ஒரு வரலாற்றுக் குரல் இந்தப் பாடல்.

எத்தனையோ தாயகக் கலைஞர்களின் பாடல்கள் ஒளிப்படங்களாகப் பார்க்கக் கிடைத்தபோதும், அவை எதற்குமே எழுத மனமொப்பாமல் இருந்த என்னை, கட்டாயம் ஓரிரு வரியேனும் எழுது என எழுத வைத்த ஒளிக்காட்சி இந்தப் பாடலாகும்.

டனுஜி கோணேஸ் அவர்களின் அழகிய குரல் இந்தப் பாடலில் பொதிந்துள்ள மென்னுணர்வுகளை மிகவும் லாவகமாக வெளிக்கொண்டு வந்திருக்கிறது. இவர் தொடர்ந்து குரலிசைப்பயிற்சியை மேற்கொண்டு வருவாரானால் எதிர்காலத்தில் மிகச்சிறந்த பாடகி என்ற சிகரத்தை நிச்சயம் எட்ட முடியும் அதேவேளை எமது இசையமைப்பாளர்கள் இவர்போன்ற இளம் பாடகர்களைத் தொடர்ந்து பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

ஈழத்து திரைப்படத்துறைக்கு மிகச் சிறந்த, திரை மொழியை சரிவரப் புரிந்துகொண்ட இளம் தலைமுறையினர் களமிறங்கியுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. இந்த நம்பிக்கையை இந்தப் பாடலினூடாக வலுப்படுத்தியுள்ளார் இயக்குநர் பிரகாஷ் ராஜா.

பாடலில் பாத்திரங்களாக வாழ்ந்திருக்கும் கவிஷா, அனுசன் ஆகியோருடன் பங்காற்றி நடித்திருக்கும் கலைஞர்கள், நவம், லிங்கம், விதுஷன், நரேஷ், தாசன், கமலாதேவி, ரகுகரன், சுதர்சனா, பகலவன், சனுஜன், அனுஷா, மகேந்திரம், சுவந்தி, கஜூரன், செல்லக்குமார், சுஜாந்தினி ஆகியோராகும்.




இயக்கம் - பிரகாஷ் ராஜா
இசை - விக்கி மகேசன்



ஒளிப்பதிவு - அருள் செல்வம்
ஒளித்தொகுப்பு - செல்வராஜ் தனுசன்
பாடல்வரிகள் - பாலா சின்னப்பு
பாடியவர் - டனுஜி கோணேஸ்
வெளியீடு - TRM PICTURE
தயாரிப்பு -VM CREATIVE
இணை தயாரிப்பு - கோணேஸ் □

# கௌதம சித்தார்த்தா கொஞ்சம் நில்...

-மாலினி மாலா-



சித்தார்த்தா!
என் மனவெளிகளின் இடுக்கு மூலைகளில்
பதுங்கியிருக்கும் இருண்ட திட்டுக்களை
உன் வார்த்தை வெளிச்சங்களினால்
துலக்கிவிட முயல்கிறேன்

சமயங்களில்
கொழுந்து விட்டெரியும் கோபம் என்னை
பஸ்ப்பமாக்கிவிடுவதற்குள்
ஒரு நீர்த்தூவலின் வருடலைப் போல
நினைவில் மேலெழுந்து தணித்து விடுகின்ற.
வார்த்தைகளுக்கும் வலிக்காமல் - நீ
அழுத்திச் சொன்ன அறிவுரைகளை
ஆதர்சங்களாகக் கொள்ளவே விளைகின்றேன்

துறவியென ஒதுங்கிச் செல்லும்
வாழ்க்கை பற்றிய
என் ஞானத்தின் முகத்தில்
எவர் எதை வீசினும்
உன் போதனையின் அகிம்சை மொழியாய்
ஒரு புன்னகை பூசிய
மந்தகாச மௌனத்தையே
பதிலெனப் பகர நினைக்கிறேன்.

இருந்துமேனோ
கடவுளென
கை கூப்பவொண்ணா தூரத்தில்
பதிலில்லா என் கேள்விகளின் முனையில்
மனக்கருவறையின்
வெளிவாசற் படியிலேயே
உன்னையும் நிறுத்தியிருக்கிறேன்
.
காரணத்தின் அடிப்படையில்
உன்னை ஒரு மொழியாலோ
இல்லை ஓர்
இனத்தாலோ வேறுபடுத்திஅடையாளப்படுத்த
முயன்றவளில்லை நான்
உனக்குள் நான் புதைந்து கிடந்த பொழுதுகளில்
உன்னை புரிந்து கொள்ளவே முயன்றிருந்தேன்
.
அன்று நீ
பசியறியாவொரு பொழுதில்
பிணியுணராக் காலத்தில்
மூப்பெய்தாப் பருவத்தில்
உளம் மலர்ந்து காதல் கொண்டாய்
வேட்கை கொண்டு
காமம் துய்த்தாய்
விந்து சிந்தி வாரிசீன்றாய்
குடும்பம் சமைத்தாய்
குதூகலக் கூத்தாடினாய்
.
பின்
ஒரு பிணி, ஒரு மூப்பு, ஒரு மரணம்
நிலையாமை மீதான
உன் கேள்விகளின் பதிலாய்
தனித்தொதுங்கியொரு
துறவறத்தை முன்மொழியுமெனில்
ஒரு தட்டிக் களிப்பின் தப்பித்தல் தத்துவங்கள்
எதை வழிமொழியும் என
எண்ணிப் பார்க்கிறேன்.
.
அன்பின் நாயகனே
கருணையின் கையணைப்பே
அகிம்சையின் வழித்தடமே
நீ கொண்ட தீர்மானம்
அன்றுன் இணையாள் கொண்டிருந்தால்
வசைபாடி அவள் சிரம் சேதம் கண்டிருக்குமா?
அன்றி
வானுறையும் தெய்வத்துள்
வைத்தவள் வழிதொடர்ந்திருப்பாயா?
.
கௌதமா!
இறுதியாக உன்னிடம் சொல்ல
ஒன்றுண்டு
போதித்தல் போல் இலகுவானதல்ல
வாழ்க்கையோடு வாதித்தல்

நம்பிக் "கை" பற்றிய பந்தத்தின்
உடல் உதிரும் வரையான பற்றுதல்கள்,
உதிரம் உதிர்த்த சொந்தத்தின்
ஊன்றுதல் வரையான போராட்டங்களோடு
வாழ்தலை எதிர்கொள்ளும்
சாதாரண சம்சாரியின்
வாழ்க்கை கற்றுத்தரும் அனுபவங்களை ஒதுக்கி
உன் போதனைகளுக்காய் மட்டும்
கரம்கூப்ப என் மனம் ஒண்ணவில்லை .

நீ
மீண்டுமொரு முறை சந்தித்திருந்தால்
யசோதரையும் இராகுலனும்
உன்னிடம் பகர எண்ணியது
இதுவாகவும் இருக்கலாம் கௌதம சித்தார்த்தா.

# பொய்க்காரி

-தீபிகா-

வாழ்த்து தெரியாது.
பூங்கொத்து தெரியாது.
பரிசு தெரியாது.


அன்னையர் தினம்
தெரியவே தெரியாது.
ஆனாலும் நீயெனக்கு ,
அம்மாவாக இருந்தாய் அம்மா.
ஒரு உதவி
நாம் செய்ததுமில்லை.
நீ எதிர்பார்த்ததுமில்லை.

எல்லோரும்
சாப்பிட்ட பிறகு சாப்பிட்டாய்.
எல்லோரும்
படுத்த பிறகு படுத்தாய்.
எல்லோருக்கும் முன் எழும்பி
தேத்தண்ணி ஆத்தினாய்.
ஊதாங்குழலில் புரக்கேறியது உன் மூச்சு.
பொச்சுமட்டையால் கரிச்சட்டி கழுவி
தேய்ந்தன உன் கைகள்.

யாருமுன்னை
சாப்பிட்டாயா? என்று கூட
கேட்டதாய் ஞாபகமே இல்லையே அம்மா!
உனக்கு இருக்கிறதா ? என்று
பார்த்துச் சாப்பிட்டதாகவும்
வரலாறுகள் இல்லையே!

யாருக்குப் புரக்கேறினாலும்,
நீயே முதல் ஓடிச் செம்பெடுத்தாய்.
யாருக்கு கல் கடிபட்டாலும்
நீயே பதறிப் போனாய்.
எப்போதாவது தலைமயிர் வந்தாலும்,
குற்றவுணர்வில் கலங்கினாய்.
யாரும்
ஆறுதல் சொல்லவேயில்லைத் தானே!
பூச்சியுருண்டைகளுக்குள் மடித்து வைத்த
உன் சேலை வாசங்களை
நுகர்ந்து வளர்ந்த பிள்ளை நான்.
ஒரு சேலைக்கு கூட
நீ ஆசைப்பட்டதுமில்லை.
யாரும் அன்பளித்ததுமில்லை.

ஒரு நாள்
ஒரேயொரு நாளேனும்,
நீ அவித்துக் கொட்டச் சலித்ததில்லையே!
உன் ஆயுள் வரலாற்றில்.



எப்படியம்மா ?
எப்படி இத்தனை மகாத்மாவாகி
வாழ்ந்திருக்கிறாய் சொல்!

முட்டுக்காய் திருவிப் புட்டவிப்பாய்.
இருபது ரூபாய்க்கு இறால் வாங்கி
எண்ணாமல் எண்ணிப்
பங்கிட்டுக் கொடுக்கும்
கணிதம் தெரிந்தவள் நீ!

உன்னைப் போலொரு சமையற்காரர்
உலகத்திலொருபோதும்
பிறக்கப் போவதேயில்லையம்மா!
நீ
அன்பள்ளிப் போட்டுத் தாழித்த
மகா சொர்க்கச் சமையல் ருசியது.

நீ சுவாமியறைக்குள் நுழையாத
அந்த மூன்று நாட்களிலும்,
வீடு வெளிச்சமற்றிருந்தது.

உன் பித்தை வெடித்த கால்களுக்குள்
இரத்தம் கசிந்த போதும்,
யாருனக்கு ஒத்தடம் கொடுத்தோம்?
நீயே வலித்து, நீயே ஆற்றிய
தாய்க் காயங்களல்லவா அவை.

நாரி நோ,
முதுகு நோ,
முள்ளந்தண்டு நோ,
குதிக்கால் நோ
இன்றெனக்கிருக்கிற இத்தனை நோவிலும்,
ஒன்று கூடவா?
உனக்கில்லாது இருந்திருக்கும்.

நீ! சரியான பொய்க்காரி.
எங்களை ஏமாற்றி ஏமாற்றி
வலி பழகியிருக்கிறாய்.

இன்றுனக்கு
அன்னையர் தினப் படம் காட்டுவதில்,
என்ன நியாயம் இருக்கப் போகிறது?

நானொரு போதும்
உனக்கு சொல்லவே மாட்டேன் அம்மா.
ஒரு உப்பற்ற வாழ்த்து.





எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவொடு நீந்துவை
மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வானொளி யென்னும் மதுவின் சுவையுண்டு
விட்டு விடுதலை யாகிநிற்பா யிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே.
-மகாகவி பாரதியார்-



தேன் தமிழிதழ் வாசகர்களுக்கு வணக்கம்.
ஆரம்ப இதழ்களில் நமது புகைப்படக் கலைஞர்கள் பற்றிய குறிப்புக்களைத் தொடராகப் பதிவு செய்து வந்ததை மறந்திருக்க மாட்டீர்கள். பல வாசகர்கள் அத்தகைய பதிவுகளைத் தொடர்ந்து வெளியிடுமாறு கேட்டிருந்தும் எனது பணி நெருக்கடிகளின் காரணமாக அவற்றைத் தொடர்ந்து தர முடியவில்லை. புகைப்படக் கலைப் பயணம் தொடர்பாக நீண்ட காலமாக எனது அவதானிப்பில் சில சிறந்த கலைஞர்களை அடையாளம் காணக்கூடியதாக இருந்தும், அவர்களைப் பதிவு செய்யாமல் தவறியதையிட்டு வருந்துகிறேன்.

அவ்வாறு எனது அவதானிப்பை அதிகம் வசப்படுத்திக் கொண்ட ஒருவர்தான் பெண் புகைப்படக் கலைஞரான கீதா இரவி அவர்கள். இனியும்கூட அவரையும், அவரது கலைத்திறனையும் பதிவு செய்யாமல் விடுவதென்பது முறையல்ல. வழமையாக ஒவ்வொரு கலைஞர்கள் பற்றியும் எனது கண்ணோட்டத்தையே பதிவு செய்து வந்திருக்கிறேன். ஆனால் அவற்றிற்கு மாறாக, திருமதி கீதா இரவி என்ற சிறந்த ஒளிப்படக் கலைஞரை நேரடியாகவே உங்களோடு தன்னைப் பற்றி உரையாட வைக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். அவரது கலையைப் பற்றி நான் முன்மொழிவதை விடவும், அவரது படங்களையும் அவரையும் அடுத்துவரும் பக்கங்களில் உங்களோடு உரையாடவிட்டு நான் சற்று ஒதுங்கி நின்று உங்களோடு ஒரு வாசகனாக அவரை வாசிக்கின்றேன்.

தோழமையுடன் தமயந்தி.




ஈழத்தில் எனது ஊர் குரும்பசிட்டி. 1967இல் பிறந்தேன். சுகநலமான குழந்தையாகத் தான் பிறந்தேன்.

போலியோ தடுப்பு மருந்து பெற்றுக்கொள்ளவில்லை. சில குழந்தைகளுக்கு கடும் காய்ச்சல், வலிப்பு வந்த படியால் பேரன்பு காரணமாக அப்பம்மா (ஆச்சி) தடுப்பு மருந்து கொடுக்க விடவில்லை. ஐந்து வயதில் திடீர்க் காய்ச்சல் வந்து வெளியே கூட்டிப் போகும் போது கீழே விழுந்தேன். பெற்றோர்கள் தூக்கி நிறுத்த என்னால் நிற்க முடியவில்லை. கண்ணிமைக்கும் நொடியில் வாழ்க்கையின் திசை மாறியது. படுத்த படுக்கையாகத் தான் முதலில் இருந்தேன்.

இளம்பிள்ளை வாதம் என்று சொன்னார்கள். தலையணை அடுக்கி சாய்த்து இருத்துவார்கள். அதன் பின் பெற்றோர்கள், மருத்துவர்கள், உறவினர்களின் கடும் முயற்சியால் ஓரளவு எழுந்து உதவியுடன் நடந்தேன். கால்கள் இடுப்பில் இருந்து பலமிழந்து போயின. இரு கால்களும் பின்புறமாக வளைந்து போயின. சிறுவயதில் பாடசாலைக்கு அப்பா, அம்மா, சித்தி தூக்கிச் சென்றார்கள், பின்பு தம்பியின் தோள்களைப் பிடித்துக் கொண்டு பாடசாலை சென்றேன். பாடசாலையில் நல்ல நண்பர்கள் உதவினார்கள்.

ஆறாம் வகுப்பு படிக்கும்போது கால்களுக்கு உலோகக்கம்பிகள் பொருத்திய சாப்பாத்துகள் செய்து இரண்டு ஊன்றுகோல்களும் பெற்றபின் அவற்றின் உத வியுடன் பாடசாலை போய் வந்தேன். கடும் மனவுளைச்சல், சக மனிதர்களின் துளைக்கும் பார்வையில் மனம் துவண்டு போகும். ஓடியாடவேண்டும் எனும் ஆசை, இயலாமை யின் வலிகள் என சிறு பிராயம் கடந்தது... அப்பா என் நம்பிக்கையின் நட்சத்திர விளக்கு. மனப்பலம், உடல் பலம் பெற மிகவும் பாடுபட்டார்...அன்பு அம்மா, அன்புமிகு சகோதரர்கள், அன்புறவுகள் பெரும் பலம்..பத்தாம் வகுப்பு வரையும் பொன்பரமானந்தர் மகா வித்தியாலயம் எனும் எமது ஊர்ப் பாடசாலையில் கல்வி கற்றேன். பின்பு உயர்தரம் வர்த்தகப் பிரிவை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் தொடங்கினேன். நாட்டுப் பிரச்சனையால் எமது கிராமம் முதல் இடப் பெயர்வை மேற்கொண்டது... இடம் பெயர்ந்து பல இடங்களில் இருந்தோம்.. அதனால் கலைப்பிரிவை தேர்ந்தெடுத்து தனியார் கல்வி நிலையங்களில் போகக் கூடிய நேரங்களில் போய்ப் படித்து பரீட்சை எழுதித் தேறினேன்...மருதனார்மடத்தில் தற்காலிகமாக இயங்கிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் சிறிது காலம் ஓவிய ஆசிரியராக வேலை செய்தேன். ஓவிய ஆசிரியர் வரதராஜன், ஓவியர் மாற்கு, ஓவிய ஆசிரியர் இராதாகிருஷ்ணன் ஆகியோா ரிடம் ஓவியம் கற்று இருக்கிறேன்.

பின்பு நாட்டுப் பிரச்சனை காரணமாகச் சித்தி நோர்வேயில் இருந்ததால் இங்கு வந்து சேர்ந்தேன். வரதாக்கா குடும்பத்தினர் ஒஸ்லோவில் முதல் வருகைக்கு பேருதவி செய்தார்கள்.
இங்கு அகதிகள் முகாமில் ரவியை சந்தித்து நட்பாகத் தொடங்கி திருமணத்தில் முடிந்தது. ரவி மிக அன்பாகப் பார்த்துக்கொண்டார். முதற் குழந்தை கிடைத்ததும் அதன் ஒரு வயதில் இங்கேயும் ஓவிய ஆசிரியராக வேண்டும் எனும் நோக்குடன் உயர்தரத்தில் கலைப்பிரிவை எடுத்துப் படித்தேன்.
அடுத்த குழந்தை கருத்தரித்து கொஞ்சம் கஷ்டங்கள் உடம்புக்கு வந்ததால் படிப்பை இரண்டு வருடங்களுடன் நிறுத்த வேண்டிய கட்டாயம் வந்தது. இரண்டு ஆண் குழந்தைகள் சொந்த வாழ்க்கை என வாழ்க்கை போனது. கொஞ்சநாள் இரண்டு மூன்று இடத்தில் வேலை செய்தேன். சித்தி, சித்தப்பா இப்பொழுது வரை அன்பு தருபவர்களாக இருக்கிறார்கள். அன்று தொடக்கம் இன்று வரை இரு நண்பர்கள் குடும்பம் அன்பும் உதவியுமாக இருக்கின்றர்கள், இன்னும் நிறைய நண்பர்கள் அன்பாக இருக்கிறார்கள். □




இந்த நோர்வே நாட்டுக்கு வந்தது என்னுடைய உடல்நிலையைப் பொறுத்த வரையில் பெரும் அதிரஷ்டம் என்று தான் சொல்லவேண்டும்.. அரசாங்கம் தனியாக இயங்கக் கூடிய வகையில் அனைத்து உதவிப் பொருட்களும் வழங்கி என்னைத் தன்னம்பிக்கையுடன் இயங்க வைத்திருக்கிறது. தனியாகப் போய் இயற்கையைப் பருகி வர வாகனத்தில் இரவு படுத்து காலையில் எழுந்து படம் பிடிப்பது வரை செயற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

திருப்பியும் வருடா வருடம் எனது உடல்நிலை சீர்கெட்டுக் கொண்டு போகிறது. வலிகள் கூடிக் கொண்டு போகின்றன. இப்போது முற்றாக சக்கரநாற்காலிக்கு மாறிக் கொண்டு இருக்கிறேன். இருப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஓவியம் வரையாததால் அத்திறமை கொஞ்சம் குறைந்து போய் விட்டது (சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பார்கள் அல்லவா) சொல்ல முடியாத வாழ்க்கைக் கஷ்டங்கள், உடல்வலி, பல யோசனைகளின் விளைவாக மனவுளைச்சல்கள் என உழன்று கொண்டு இருந்தேன். மனதுக்கு சக்தி ஏற்றுவதற்கு வரதாக்கா வீட்டுக்கு போவேன். அவாவை பார்த்தாலே சக்தி ஏறும். விஸ்ணு அண்ணா, தங்கன் அண்ணாவுடன் பேசிக் கொண்டிருக்கப் பிடிக்கும். அங்கே போனால் அவர்கள் வந்து சந்திப்பார்கள். தங்கன் அண்ணா தான் இந்தத் துறையை எனக்கு அறிமுகம் செய்தார். அடிப்படைப் புகைப்பட அறிவை சொல்லித் தந்தார். இந்தக் கலைக்குள் என்னைப் புகுத்தியதற்கு அவருக்கு பெருநன்றி எப்போதுமே சொல்லத் தோன்றும்.

அதன் பிறகு சித்தியின் Canon eos 400d காமராவை தற்காலிகமாக வாங்கிக் கொண்டு சக்கரநாற்காலியில் காடுமேடு சுற்றினேன். அப்படி ஒருநாள் வண்ணத்துப் பூச்சிகளைப் படம் எடுத்துக் கொண்டிருந்த போது அவ்வழியே ஓடி வந்து கொண்டிருந்த ஒரு நோர்வேஜியன் பெண்மணி, நின்று நலம் விசாரித்து புகைப்படக் கலையில் ஆர்வமா எனக் கேட்டு தொன்ஸ்பேர்க் கமரா கிளப்புக்கு எனது கணவர் போகிறவர் என்று சொல்லி அதிலிருந்தே கணவருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து கிளப் நம்பர் வாங்கித் தந்து சென்றார்.

அதன் பிறகு அங்கே இணைந்து கொண்டேன். பின்பு Bjørn Joakimsen என்பவரிடம் அடிப்படை வகுப்புக்கு சென்றேன். கமராகிளப் நண்பர்களும் கற்றுத் தந்தார்கள். அதில் மூன்று நண்பர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். அதிலொருவர் நிறைய உதவிகள் முன்னோக்கி செல்வதற்கு செய்திருக்கிறார். குளிர்காலத்தில் உன்னால் வெளியே போக முடியாவிட்டால் என்ன, கவலைப்பட வேண்டாம் பறவைகளை உன்னைத் தேடி வர வைத்தால் போகிறது என்றுகூறி, பறவைகளுக்கு உணவு வழங்கும் இடத்தை அழகாக அமைத்தும் தந்தார். அந்த உதவியினால் எடுத்த படங்கள் சான்றிதழ்கள் பெற்றிருக்கின்றன. எதிர்பார்ப்பற்ற உதவிகள் செய்யும் நண்பர்கள் பெருவரம்.

இயற்கை ஒளியில் படங்களை எடுக்கிறேன். Studio lighting கற்றுக்கொள்ளவில்லை. புகைப்படக் கலை ஒரு பெருங்கடல். கற்ற துளியளவை வைத்துக் கொண்டு முடிந்தளவு நன்றாக எடுக்க முயற்சி செய்கிறேன்...தொன்ஸ்பேர்க் கமராக் கிளப் நண்பர்களின் ஊக்கமளிப்பினால் ஒவ்வொரு வருடமும் NM போட்டிகளில் கிளப் மூலம் கலந்து கொள்கிறேன்.



முறையே 2017, 2021, 2022 இல் ஒவ்வொரு படங்களுக்கு Honorable mention கிடைத்து இருக்கிறது. 12 படங்கள் போட்டிக்கு தேர்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டன. கமராகிளப் மூலம் வைக்கப்படும் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் படங்கள் தொன்ஸ்பேர்க் பாலத்திலும், தியேட்டரிலும் வைக்கப்படும் அதிலும் தொடர்ந்து எனது படங்களும் தெரிவாகி வருகின்றன.
லயன்ஸ் கலண்டரு க்கும் படங்கள் ஒவ்வொரு வருடமும் தெரிவாகி வருகிறது.

நான் பெரும் இயற்கை நேசிப்பாளினி... அதனால் இந்தக்கலை எனக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இந்தக் கலையை மிக மிக விரும்பி நேசித்து செய்கிறேன்... எனது இயக்கம் வரையறைக்கு உட்பட்டது. மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் தான் படங்களை எடுக்கிறேன். அதனால் ஒவ்வொரு படமும் எனக்கு பெறுமதி மிக்கதாய் தோன்றுகிறது. எல்லா இடத்துக்கும் போக முடியாது, எல்லாக் கோணங்களிலும் எடுக்க முடியாது. அந்த நேரங்களில் எனது இயலாமை மனதை வருத்தும். அதே நேரம் கிடைத்த வரையில் திருப்திப் பட வேண்டும் என்று மனம் இன்னொரு பக்கம் ஆறுதல் படுத்தும். இங்கே இருக்கும் நோர்வே மக்கள் நிறைய பாராட்டி ஊக்குவிக்கிறார்கள். அவ்வப்போது படங்களும் வாங்கிக் கொள்கிறார்கள். இன்னும் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டும். இயங்கக் கூடிய வரையில் நிறையப் படங்கள் எடுக்க வேண்டும். கலைத்துவமான படங்கள் எடுக்க வேண்டும் என்று ஆசை இருக்கிறது. கிட்டத்தட்ட மூன்றரைக் கிலோ பாரம் தூக்கி எடுக்க கை சோர்ந்து போகிறது. அடுத்ததாகப் பாரம் குறைந்த கமரா, லென்ஸ் வாங்க வேண்டும். என்னைப் பெரு மகிழ்ச்சிக்குள்ளாக்கும் இக்கலை தடைகள் தாண்டித் தொடரும்..













# 17. mai




Aurelia - 5år



Jeg gleder meg veldig til 17.mai.

Jeg skal ta med flagget og rope ”Hurra” for 17.mai, fordi det er sånt vi gjør på 17. mai.

Jeg skal spise mange ”båt is”, det er favoritten min.

Vi skal besøke ”besten” (far far) og ”besto” (far mor) og spise pølse og kake der.

மே 17 க்கு நான் மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறேன்.
மே 17க்கு கொடியைக் கொண்டுவந்து “hurra” என்று கத்துவேன். ஏனென்றால் மே 17 அன்று நாங்கள் அதைத்தான் செய்கிறோம்.
நான் நிறைய “போட் ஐஸ்கிறீம்” சாப்பிடுவேன், அது எனக்கு மிகவும் பிடித்தது.
நாங்கள் எமது அப்பப்பா அப்பம்மா ஆகியோரிடம் சென்று, அங்கு pølser மற்றும் கேக் சாப்பிடுவோம்.

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
(Print ISSN: 2703-8785)
VIPS: 729129 - Konto: 3626 31 78585